**இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ-வீதி II) - 2022**

---

இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (ஐ-வீதி II) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3579 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் 3580 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகள் மற்றும் 2019 நவம்பர் 13 ஆம் திகதி 3851 எஸ்ஆர்ஜ மற்றும் 2021 மே 28 ஆம் திகதிய 4067 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

நிகழ்ச்சித்திட்டக் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பது நீண்டகால விளைவாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 165,185 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 137,070 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 28,115 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 184.6 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியிடல் திட்டம் பலதரப்பட்ட நிதி வசதிகளின் கீழ் ஐந்து பகுதிகளை கொண்டிருந்ததுடன் அதில் ஐ.அ.டெலர் 500 மில்லியன் தொகையான முதல் மூன்று பகுதி உடன்படிக்கைகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவருடன் கைச்சாத்திடப்பட்டிருந்தன. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 யூலை 20 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2027 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,569.76 மில்லியன் தொகையான 09 பூர்த்தி செய்யப்பட்ட வீதிப் பொதிகளின் கிரயத்தை நிகழச்சித்திட்டம் மூலதனமாக்கியிருந்த போதிலும் அந்த 09 பொதிகளில் 08 பொதிகளுக்காக ரூபா 129.77 மில்லியன் தொகை குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்களுக்கு மேலும் செலுத்தப்பட வேண்டும். எனவே பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளின் கிரயம் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 129.77 | பதிவுகள் உரிய கணக்குகளுக்கு மேற்கொள்ளப்படும். | பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளின் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 8 இற்கு முரணாக ஒப்பந்தங்கள் நிறுத்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ரூபா 1,250.88 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் செயலாற்றல் உத்தரவாதங்கள் தொடர்பில் சந்தேகத்திற்கிடமான அறவீடுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்ததாரர்கள் அந்த அறவீடுகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளமையும் வெளிப்படுத்தப்பட்டது. | 1,251 | ஒப்பந்ததாரர்கள் உத்தரவாதங்களை காசாக்குவதைத் தடுக்கும் நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றனர். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | ஐ-வீதி மற்றும் ஐ-வீதி 2 இன் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு தொடர்பான மீளாய்வாண்டிற்கான ரூபா 18.32 மில்லியன் தொகையான முழு கட்டிட வாடகையையும் ஒவ்வொரு அலகுக்கும் விகிதாசாரமாக பிரிக்கப்படாமல் ஐ-வீதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | 18.32 | PAM இன் பிரகாரம் ஐவீதி II நிகழச்சித்திட்டத்திற்கு அதன் செலவினத்தில் ஒரு பகுதியைப் பங்கீடு செய்வது சாத்தயமற்றதாகும். | நிகழச்சித்திட்டங்களுக்கு இடையே செலவினங்கள் நியாயமான முறையில் பிரிக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனையின் 14.6 ஆம் உட்பிரிவு | ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழின் குறைந்தபட்சத் தொகையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியின் 1.5 சதவீதமாகும். எனினும், மீளாய்வாண்டின் போது 58 பொதிகளின் கீழ் ரூபா 5,192.39 மில்லியன் தொகையான 326 இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்கள் தேவையான வரம்புக்குக் கீழே ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. | நாட்டில் உள்ள கடினமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, கொடுப்பனவு பெறுமதிகள் வரம்பிற்குக் குறைவாக இருந்த போதிலும் மாதாந்த கொடுப்பனவுச் சான்றிதழ்களைச் செயன்முறைப்படுத்துவதற்கு ஆலோசகர் (பொறியியலாளர்) அறிவுறுத்தப்பட்டார். | ஒப்பந்தத்தின் நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட வரம்புகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் 14.7 மற்றும் 14.8 ஆம் உட்பிரிவுகள் | ஒவ்வொரு IPC இலும் சான்றுபடுத்தப்பட்ட தொகையை தொழில்தருநர் 56 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 2,102.71 மில்லியன் தொகையான 90 IPC கொடுப்பனவுகளில் 01 முதல் 90 நாட்கள் வரையிலான தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தாமத காலப்பகுதியின் போது செலுத்தப்படாத தொகைக்கு நிதிக் கட்டணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்து உள்ளது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரரின் சமர்ப்பிப்பில் சில ஆவண முரண்பாடுகள் மற்றும் முழுமையின்மைகள் இருக்கலாம். இது 56 நாட்களுக்கு அப்பால் தாமதத்தை ஏற்படுத்தும். | ஒப்பந்தத்தின் நிபந்தனை பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் 4.2 ஆம் உட்பிரிவு | ஒப்பந்த பொது நிபந்தனையின் 4.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறிகள் ஒப்பந்ததாரர்களால் அவர்களது சொந்த கிரயத்தில் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்ததாரர்களிற்கான கோரக்கூடிய பூர்வாங்க மற்றும் பொது உருப்படிகளின் கீழ் BOQs இல் தனித்தனி கொடுப்பனவு உருப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் பிணைமுறிகளின் கிரயத்தை மீள்நிரப்புச் செய்வதற்காக ஊவா மாகாணத்தில் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 85.64 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிதியேற்பாடு வழங்கப்படாததால், உத்தரவாதத்தின் கிரயம் மற்றும் ஏனைய பொதுச் செலவினங்கள் BOQ உருப்படிகளின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கும். | ஒப்பந்தத்தின் நிபந்தனை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் | ரூபா 5 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியுள்ள பொது ஒப்பந்தங்களின் கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களைச் சேகரிப்பதற்கு முன்னர் பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும், | ADB உறுப்பினர் நாடுகளில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்த கம்பனிகளிலிருந்து ADB தேவைப்பாடுகளின் பிரகாரம் | கேள்விதாரர்கள் மற்றும் வழங்கப்பட்ட ஒப்பந்தம் பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு |

| | | |
|---|---|---|
| மேலும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் ஒப்பந்தப் பதிவைப் பெற வேண்டும். உரிய கேள்விதாரர்களின் தொழில்நுட்ப கேள்விகளை மதிப்பிடும்போது அந்தத் தேவையை செயற்திட்டம் கருத்தில் கொண்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் ADB ஆல் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் (%) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%) | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் சீபுனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல். | தேசிய மற்றும் கிராமிய வீதிகள் | 89.35 | 66.95 | (அ) வசதி நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் 417.75 கிமீ தேசிய வீதிகளும், 3338.87 கிமீ 1349 கிராமிய வீதிகளும் புனரமைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 13 தேசிய வீதிகளில் 153.74 கிமீ மற்றும் 557 கிராமிய வீதிகளில் 1,432.42 கிமீ புனரமைப்பு பணிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு உரிய முகவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.<br><br>(ஆ) கிராமிய வீதிகளுக்கான 720 நாட்களுக்கான ஆரம்ப ஒப்பந்த காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வீதி புனரமைப்புப் பணிகளின் 444 நாட்கள் முதல் 530 நாட்கள் வரையிலான காலப்பகுதி கடந்திருந்தது. | வினைத்திறனற்ற ஒப்பந்த முகாமைத்துவம், எரிபொருள் கட்டுப்பாடு மற்றும் பொருள் பற்றாக்குறைகள். |

**முகாமைத்துவத்தின் பதில்** 2022 இன் கடைசிக் காலாண்டில் அறிவிக்கப்பட்ட சிவில் பணிகளின் தற்காலிக இடைநிறுத்தம், பூர்த்தி செய்தல் சதவீதத்தை இந்த அளவிற்கு மட்டுப்படுத்தியது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **(i)** | **ஒப்பந்தங்களின் கால நீடிப்பு (EOT)** | | |
| (அ) | 04 மாகாணங்களில் கிராமிய வீதிகளை புனரமைப்பதற்காக இடைநிறுத்தப்பட்ட 03 பொதிகள் உட்பட 53 பொதிகளில், ஒப்பந்த காலம் 46 பொதிகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த பொதிகளுக்கு 1 முதல் 30 வரையான தடவைகள் பல சந்தர்ப்பங்களில் EOT வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், ஒப்பந்ததாரர்களுக்கான கால நீடிப்பை அங்கீகரிப்பதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தன. | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிகழ்ச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கால நீடிப்பு 57 முதல் 684 நாட்கள் வரை வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும் இது ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆரம்ப ஒப்பந்த காலத்தில் (730 நாட்கள்) 8 சதவீதம் முதல் 94 சதவீதம் வரை பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், மேல் மாகாணத்தில் 58 நாட்கள் முதல் 164 நாட்கள் வரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது, இது ஆரம்ப ஒப்பந்த காலமான 912 நாட்களில் 6 சதவீதம் முதல் 18 சதவீதம் வரை பிரதிநிதித்துவப்படுத்தியது. | கொவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், ஒப்பந்ததாரர்களுக்கான கால நீடிப்பை அங்கீகரிப்பதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தன. | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிகழ்ச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆரம்பகால EOTs இற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமலேயே நிகழ்ச்சித்திட்டமானது மீண்டும் மீண்டும் கால நீடிப்புக்களை வழங்கியிருந்தது. | ஒப்பந்ததாரரின் கோரிக்கை மற்றும் பொறியியல் ஆலோசகரின் பரிந்துரைகளின் அடிப்படையில் திட்டவட்டமான காரணங்களுக்காக நீடிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிகழ்ச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் ஒப்பந்தப் பொதிகளின் கால நீடிப்புத் திகதி பூர்த்திசெய்தல் திகதியிலிருந்து 18 மாதங்களுக்கு மேல் கடந்திருந்த போதிலும் மேலும் காலநீடிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 81.99 மில்லியன் தொகையான தாமத சேதங்கள் ஒப்பந்த பொது நிபந்தனைகளின் 8.7 ஆம் பிரிவிற்கு முரணாக 05 ஒப்பந்தப் பொதிகளிலிருந்து மாத்திரமே மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரின் ஆலோசகர் பரிந்துரைத்த கோரிக்கையின் செல்லுபடித்தன்மையை சரிபார்த்த பின்னர் அமைச்சு மட்டத்தில் உள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடமிருந்து பரிந்துரை பெறப்படும். | ஒப்பந்த நிபந்தனை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிர்மாணத்தின் கால நீடிப்புக்காக வரிசை அமைச்சின் செயலாளரின் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அசாதாரணமான கால தாமதங்கள் ஏற்பட்டிருந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டதுடன் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு EOT விண்ணப்பம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு பல நிலைகளைக் கடந்து செல்ல வேண்டியுள்ளதுடன் அது நேரத்தை எடுத்துக்கொள்கிறது. | EOT செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ii)** | **முடிவுறுத்தப்பட்ட பொதிகள்** | | |
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் 15.3 ஆம் பிரிவின் பிரகாரம் முடிவுறுத்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட பின்னர் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வேண்டிய பணிகள், பொருட்கள் மற்றும் ஏனைய தொகைகளின் பெறுமதியை பொறியியியலாளர் தீர்மானிக்க வேண்டிய போதிலும் அது 09 முதல் 14 வரையான மாத காலப்பகுதி கடந்த பின்னர் பொறியியலாளரால் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தங்களின் பொது நிபந்தனையின் 15.3 ஆம் பிரிவிற்கு முரணாக முடிவுறுத்தல் பெறுமதியை கணிப்பிடுவதற்கு முன்னர் 2021 மே 12 இல் அந்த ஒப்பந்தங்களிற்கு மீளக்கேள்வி கோருவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனவே, முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்ததாரர்களின் பூர்த்திசெய்யப்பட்ட பணிகளைக் கருத்தில் கொள்ளாமல் மீளக்கேள்வி கோரப்பட்ட பொதிகளுக்கான மிகுதிப் பணிகளின் பொறியியல் மதிப்பீடுகளின் நம்பகத்தன்மை கணக்காய்வின் போது சிக்கலாக இருந்தது. | மதிப்பீடு செயன்முறையில் இருந்த போது தாமதம் தொடர்பான மேலதிக கிரய அதிகரிப்பைக் குறைப்பதற்கும், பொதுமக்களின் புகார்கள் மற்றும் பொதுமக்களின் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கும் மிகுதிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மீளக் கேள்வியை கோருவதற்கு செயற்திட்டம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனையின் 15.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டதும் உடனடியாக பொறியியலாளர் வேலைத்தளத்தில் உள்ள பொருட்களை மதிப்பீடு செய்திருக்காதமை அவதானிக்கப்பட்டது. | வேலைத்தளத்தில் உள்ள பொருட்களை மதிப்பீடு செய்வதற்கு ஒப்பந்ததாரர் கூட்டாக பரீட்சிக்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனை பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | முடிவுறுத்தப்பட்ட மூன்று பொதிகளுக்குப் பதிலாக, இது 09 ஒப்பந்தப் பொதிகளாகப் பிரிக்கப்பட்டு, 2021 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்தால் மீளக் கேள்வி கோரப்பட்டது. அவற்றில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு 07 ஒப்பந்தப் பொதிகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. முடிவுறுத்தப்பட்ட பொதிகளின் ஆரம்ப ஒப்பந்த | முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பந்த விலைகள் தவிர்க்க முடியாமல் அதிகமாக இருந்தன.<br><br>மீள-வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதிகள் ரூபா 1,040 மில்லியனால் | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிகழச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலைகள் மற்றும் முடிவுறுத்தல் வரை மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது மீண்டும் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 1,040.64 மில்லியனால் அதிகரித்துள்ளது. மேலும், எதிர்காலத்தில் எஞ்சிய இரண்டு பொதிகளை வழங்கும் போது கிரயம் மேலும் அதிகரிக்கப்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | அதிகரித்திருந்த போதிலும் இந்தக் கிரயம் தொழில்தருநரின் உரிமைக்கோரல் மற்றும் செயலாற்றல் பிணைமுறிகளை காசாக்குதலின் அடிப்படையில் குறைக்கப்படும். | |
| (ஈ) | வீதி நிர்மாணத்தின் மெதுவான முன்னேற்றம் காரணமாக 2020 திசெம்பர் 10 இல் BA-06 ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு பொறியியலாளர் பரிந்துரைத்திருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டம் ரூபா 90.47 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் இரண்டாம் பகுதியை 2021 சனவரி 05 இல் விடுவித்ததைத் தொடர்ந்து, 2021 பெப்ரவரி 28 வரை முன்பண கொடுப்பனவு உத்தரவாதத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடிவுறுத்தல் பரிந்துரைகள் செயன்முறைப்படுத்தப்படும் போது அதை மறுக்கவோ அல்லது நிறுத்தி வைக்கவோ முடியவில்லை. | ஒப்பந்ததாரர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கடன் வழங்கும் முகவர் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை அறவிடுவதற்கும், முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக கடன் வழங்கும் முகவரிற்கு மீள்நிதியிடுவதற்கும் அறிவுறுத்தியிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 560.14 மில்லியன் தொகையை ஒரு வருட காலத்திற்கு மேலாக அறவிட முடியவில்லை. ஏனெனில் வேலை ஆரம்பிப்பு முற்பண பிணைமுறிகளை காசாக்குவதற்கு எதிராக ஒப்பந்ததாரர்களால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. | உத்தரவாதங்களை காசாக்குவதைத் தடுப்பது தொடர்பாக வணிக உயர் நீதிமன்றத்தில் எங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட உடனேயே பிணைகளை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 2.4 மற்றும் 2.6 ஆம் உட்பிரிவுகளின் பிரகாரம் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பொறியியலாளர் மதிப்பீடுகள், கேள்வி ஆவணங்கள் மற்றும் அளவீட்டு விலைப்பட்டியல்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு BA 4 மற்றும் BA 5 ஒப்பந்தப் பொதிகள் தொடர்பாக பொறியியலாளர் மதிப்பீடுகள், கேள்வி ஆவணங்கள் மற்றும் அளவீட்டு விலைப்பட்டியல்கள் ஆகியவற்றில் உள்ள பொருட்களின் விலைவிகித முரண்பாடுகள் மற்றும் தவறான விளக்கம் காரணமாக ரூபா 48.2 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | எதிர்கால ஒப்பந்தங்களில், ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட பின்னர் BOQs இல் அத்தகைய பொருட்களைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ADB இடம் அவர்களின் கேள்வி மதிப்பீட்டு வழிகாட்டல்களை மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்படும். | நட்டத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஒப்பந்த நிபந்தனைகளின் 108.4 மற்றும் 120.7 ஆம் உட்பிரிவுகளின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் அனைத்து ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்கள் ஒப்பந்ததாரருக்குத் திருப்பியளிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 518.99 மில்லியன் மற்றும் ரூபா 14.13 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக மொத்தமாக செலுத்தப்பட்டுள்ளது. இதனால், சாதகமான ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நன்மைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை சுட்டிக்காட்டலாம். | PMU இந்த நிபந்தனைகளை உருவாக்கியது, ஏனெனில் RDA இடம் இதே போன்ற உபகரணங்களின் போதுமான அளவு இருப்பு உள்ளது. | ஒப்பந்தங்களின் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். |
| (v) | நிகழ்ச்சித்திட்டத்தால் காசாக்குதல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தப் பொதிகளுடன் தொடர்புடைய ரூபா 690.74 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் உத்தரவாதங்களை நிகழ்ச்சித்திட்டம் காசாக்கத் தவறியிருந்தது. | செயலாற்றல் உத்தரவாதங்களை காசாக்குவதைத் தடுப்பதற்கு ஒப்பந்ததாரர்கள் நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றுள்ளதுடன் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. | ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட உடனேயே பிணைகளை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 9,984.24 மில்லியனாக இருந்ததுடன் கடனின் மிகுதித் தவணைகளை விடுவிக்கும் வரை ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படுவதால், அறவிடும் தன்மை நிச்சயமற்றதாக இருக்கலாம். | IPCs இற்கான கொடுப்பனவுகள் தொடங்கியவுடன், வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் அறவிடப்படும். | வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | ஊவா மாகாணத்தில் முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தங்களிற்கான மீளக் கேள்வி கோரல் செயன்முறையில் ஏற்பட்ட தாமதம், வீதி புனரமைப்புப் பணிகளின் சுமூகமான செயற்பாட்டை நேரடியாகப் பாதித்தது. தற்போதுள்ள வீதிகளை வழமையாகப் பராமரிப்பதற்கான வீதிப் புனரமைப்புப் பணி ஒப்பந்தங்களின் குறிப்பிட்ட நிபந்தனை 103.2 (2) இன் கீழ் கொடுப்பனவு உருப்படி உள்ள போதிலும், அவசரகால பராமரிப்பு பணிகளை மேவுகை செய்வதற்கு மீளக் கேள்வி கோரப்பட்ட ஒப்பந்தங்கள் வழங்கப்படும் வரை ரூபா 66.26 மில்லியன் பெறுமதியில் 04 மேலதிக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது நிகழ்ச்சித்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியது. | மீளக் கேள்வி கோரப்பட்ட ஒப்பந்தங்கள் வழங்கப்படும் வரை அவசரகால பராமரிப்புப் பணிகளை மேவுகை செய்வதற்கு இந்த கிரயத்தை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகும். | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிகழச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | 2006 இன் பெறுகை வழிகாட்டலின் 8.9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியானது ரூபா 500 மில்லியனிற்கு மேல் இருந்தால், ஒப்பந்த உடன்படிக்கை வரிசை அமைச்சின் செயலாளரால் கைச்சாத்திடப்பட வேண்டும். எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் அந்த வரம்பிற்கு மேல் 66 சிவில் வேலை ஒப்பந்தங்கள் மற்றும் 4 ஆலோசனை ஒப்பந்தங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரால் கைச்சாத்திடப்பட்டுள்ளன. | 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம், RDA உடன் செய்துகொள்ளப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடுவதற்கு RDA இன் தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

**3.3 ஆலோசனை சேவைகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டம் 2022 சனவரி 03 இல் பிரதானமாக வீதி பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை (RMTF) விரிவுபடுத்துதல், உள்ளூர் வீதி பராமரிப்புக்கான RDA இன் பொறுப்பை விரிவுபடுத்துதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்கான விரிவான கணக்கீட்டு மற்றும் நிதிக் கையேட்டை உருவாக்குதல் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 8.2 மில்லியன் பெறுமதியில் பொது நிர்வாக நிபுணருடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | உள்ளூர் வீதிப் பராமரிப்புக்காக RMTF மறுசீரமைக்கப்பட்டு விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிபுணர் வழங்கிய அறிக்கையில் உள்ள கொள்கை விருப்பங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொள்கை அளவிலான சில முடிவுகள் இன்னும் நிலுவையில் உள்ளன. எனவே, RMTF மறுசீரமைப்பு வெற்றியடைந்திருக்கவில்லை. | ஒப்பந்த காலப்பகுதியினுள் ஆலோசகரின் பணியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 வீதி புனரமைப்பு பெறுகைகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| | மேல் மாகாணத்தில் 06 தேசிய வீதிகளின் 54.52 கிலோமீற்றர் புனரமைப்பை நிகழ்ச்சித்திட்டம் அமுலப்படுத்தியது. பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகை செயன்முறை 2021 செப்தெம்பர் 15 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. மேற்படி 06 பொதிகளின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 7,810 மில்லியன் ஆகும். பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2021 நவம்பர் 19 இல் நடைபெற்ற கூட்டத்தில், பொதி -2 இற்காக ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த கேள்வி விலைக்கு பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்த போதிலும் அமைச்சு பெறுகைக் குழு, எந்த விலைப் பேச்சுவார்த்தையும் இல்லாமல் குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முடிவு செய்தது. மேலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைக் கடைப்பிடிக்காமல் ஒப்பந்ததாரர்களுக்கு அமைச்சு பெறுகை குழுவால் வழங்கப்படும் தேவையற்ற நன்மைகள், செயற்திட்டக் கிரயம் சிக்கனமற்ற முறையில் அதிகரிப்பதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால், இந்தப் பகுதியில் வீதி நிர்மாணப் பணிகள் சிக்கலானதாக உள்ளதென MPC கருத்து தெரிவிக்கிறது. | TEC ஆல் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை பெறுகைக் குழு பின்பற்ற வேண்டும். |
| (ii) | பெறுகை கையேட்டின் 7.9.2 ஆம் பிரிவின் பிரகாரம் மிகக் குறைந்த மதிப்பிடப்பட்ட பதிலளிக்கக்கூடிய கேள்வியானது பொறியியலாளரின் மதிப்பீட்டை விட கணிசமான அளவு அதிகமாக இருந்தால் பெறுகை நிறுவனம் புதிய கேள்விகளைக் கோர வேண்டும் அல்லது திருப்திகரமான ஒப்பந்த விலையைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரருடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| | (அ) பேரம் பேசப்பட்ட கேள்வி விலைகள் பொறியியலாளர் மதிப்பீட்டை விட கணிசமான அளவு அதிகமாக இருந்த போதிலும் மேல் மாகாணத்தில் மூன்று தேசிய வீதி ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அது 21 சதவீதம் முதல் 28 சதவீதம் வரை வேறுபடுகிறது. | இணங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டலின் நிபந்தனைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ஆ) வவுனியா மாவட்டத்தில் நான்கு கிராமிய வீதி ஒப்பந்தப் பொதிகள் (VA-01 முதல் 04 வரை) பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னரும் 33 சதவீதம் முதல் 39 சதவீதம் வரையான வீச்சிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகளுடன் வழங்கப்பட்டுள்ளன. | கோரப்பட்ட விலைகள் நியாயமானவை என்றும் ஒப்பந்தத்தை வழங்குவது என்றும் TEC கருதுகிறது. | பெறுகை வழிகாட்டலின் நிபந்தனைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் நிலையான கேள்வி ஆவணங்களுக்கு முரணாக ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களிற்கு குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமாக பதிலளிக்கக்கூடிய கேள்விதாரர்களை அனுமதிக்க முடியாத வகையில் கேள்வி ஆவணங்களின் 3 ஆம் பிரிவில் உள்ள 1.6 இன் கீழ் ஒரு விசேட உட்பிரிவை நிகழ்ச்சித்திட்டம் சேர்த்திருந்தது. எனவே மிகக்குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமாக பதிலளிக்கக்கூடிய கேள்விதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப் பொதிகளை ஏலம் எடுக்க முடியாது. இந்த முறையின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த ஐந்து பொதிகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 695.45 மில்லியன் அதிக கிரயம் ஏற்பட்டது. | இணங்கப்பட்டது. ஒரு ஒப்பந்ததாரருக்கு பல ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட போது அமுல்ப்படுத்தல் கட்டத்தில் தோல்வியைத் தவிர்ப்பதற்கு இந்த அளவுகோல் அறிமுகப்படுத்தப்பட்டது. | பெறுகை வழிகாட்டலின் நிபந்தனைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். |
| (iv) | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் அனைத்து பொதிகளும் 2021 செப்தெம்பர் 21 இற்கு முன்னர் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் NR/1 மற்றும் NR/3 என பெயரிடப்பட்ட ரூபா 4,320.25 மில்லியன் பெறுமதியான இரண்டு பொதிகள் 2022 திசெம்பர் 31 | இணங்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதிகள் கிடைக்காததால் வழங்குதல் முடிவு நிறுத்தப்பட்டுள்ளது. | பெறுகை செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 மாதங்களுக்கும் மேலாக தாமதம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வின் போது அந்த இரண்டு பொதிகளின் கேள்வியின் செல்லுபடியாகும் தன்மை எதிர்காலத்தில் சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | | |
| (v) | நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,163 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் 21 பெறுகைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கடன் உடன்படிக்கையின் 4 ஆவது தவணையில் கையெழுத்திடுவதில் தாமதம் காரணமாக அந்த பெறுகை பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. நிதி சிக்கல்களால் பெறுகை நடவடிக்கைகள் தாமதமாகின்றன. | பெறுகை செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

| **இல.** | **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| | வவுனியா மாவட்ட வீதி நிர்மாணங்களில் மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சிப்பின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (அ) | VA 01 மற்றும் VA 04 ஒப்பந்தப் பொதிகளில் 19.66 கிமீ உள்ளடங்கிய ஏற்கனவே 72 நாட்கள் முதல் 359 நாட்கள் வரை நீட்டிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக் காலப்பகுதிகளின் 13 வீதிகள் தொடர்பான புனரமைப்பு பணிகள் 2022 திசெம்பர் 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையால் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டன. | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கால எல்லையினுள் நிகழ்ச்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்ததாரர்கள் அனைத்து அடையாளங்கள், விளக்குகள், தடைகள், போக்குவரத்து கட்டுப்பாட்டு சிக்னல்கள், வீதி | வேலைத்தளத்தில் உள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டு, ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் | தொழில்தருநர் மற்றும் ஆலோசகர் பாதுகாப்பு நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | அடையாளங்கள் போன்றவற்றை நிறுவி பராமரித்தலை வழங்குவதன் மூலம் போக்குவரத்து மற்றும் மூன்றாம் தரப்பினரின் பாதுகாப்பிற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுடன் தடைகள் வலுவான சிவப்பு விளக்குகளை கொண்டிருக்க வேண்டும் அல்லது தொழில்நுட்ப குறிப்புரைகளின் 103 ஆம் உட்பிரிவின் பிரகாரம் இரவில் தடைகள் தொடர்பாக எச்சரிக்கை விளக்குகள் இருக்க வேண்டும். எனினும் VA 03 மற்றும் VA 04 பொதிகளின் ஒப்பந்ததாரர்கள் அந்தத் தேவைப்பாடுகளுடன் இணங்கத் தவறியிருந்தனர். மேலும், அந்த ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 18.05 மில்லியன் மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கடிதங்களுக்கு இணங்க மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டது. | செயற்திறனாக மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (இ) | குறிப்புரைகளின் 701 ஆம் உட்பிரிவின் பிரகாரம் வீதியின் இருபுறமும் உள்ள வளாகத்தின் உரிமையாளர்கள் மற்றும் வீதியை பயன்படுத்துபவர்களுக்கு அதிக சிரமம் இல்லாமல் குறைந்தபட்ச காலத்திற்குள் வளாகத்திற்கான அணுகலை ஏற்படுத்தி நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வீடுகளுக்கான அணுகல் வீதிகள் VA 03, VA 02 மற்றும் VA 04 பொதிகளில் முறையே வீதி ID NAV 026, NAV 066 மற்றும் NAV 046 ஆகியவற்றில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர் வளாகத்தின் உரிமையாளர்கள் மற்றும் வீதியை பயன்படுத்துபவர்களுக்கு அதிக சிரமத்தை ஏற்படுத்தாமல், குறைந்தபட்ச நேரத்திற்குள் தற்காலிக அடிப்படையில் அணுகலை வழங்கியிருந்தார். | சாத்தியமானளவு குறைந்த காலத்திற்குள் வீதி அணுகல் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | NVA 026 மற்றும் NVA 062 வீதிகளின் அஸ்பால்ற் இடும் பணி முறையே 2021 திசெம்பர் 21 மற்றும் 2021 செப்தெம்பர் 28 இல் பூர்த்தி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் முழுமையடையாத வீதி ஓரங்கள், கட்டமைப்புக்கள், வீதி அடையாளங்கள் மற்றும் அடையாளப் பலகைகள் போன்ற சந்தர்ப்பங்கள் | உள்ளூர் சந்தையில் நிர்மாணப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் மோசமான காசுப்பாய்ச்சல் நிலைமை காரணமாக அடையாளம் காணப்பட்ட நிலுவையில் உள்ள பணிகளை பூர்த்தி செய்தல் கணிசமாக பாதிக்கப்பட்டது. | குறிப்புரைகளைப் பின்பற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். |

அவதானிக்கப்பட்டன. மேலும் ஓரங்களை பூர்த்தி செய்வதில் தாமதம் அஸ்பால்ற் அடுக்கின் விளிம்புகளை அரித்து, வீதிகளின் தரம் மற்றும் நீடித்த தன்மையை மோசமாக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.6 புறம்பான கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கப்படாத பெறுவனவுகளில் ரூபா 90.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.46 மில்லியன் தொகையான திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் சிக்கனமற்ற முறையில் கடன் வழங்கும் முகவரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட காலத்திற்குள் தவணைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கடப்பாட்டுக் கட்டணத்தை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | கடன் நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 மனித வள முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்

| பதவியணி நிலை | புதவிகளின் எண்ணிக்கை | | வேற்றிடங்களின் எண்ணிக்கை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ஆங்கீகரிக்கப்பட்டது | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | |
| சிரேஷ்ட பொறியியலாளர் | 6 | 2 | 4 | சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் அத்தியாவசிய பதவியணியினரை மாத்திரமே ஆட்சேர்ப்பதற்கு நியமன அதிகாரி அங்கீகாரத்தை வழங்கியிருந்தார். | செயலாற்றலை அதிகரிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் உகந்த பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| ஒருங்கிணைப்பு பொறியியலாளர் | 14 | 3 | 11 | | |
| செயற்திட்ட பொறியியலாளர் | 28 | 17 | 11 | | |

### 3.8 செயற்திட்ட முகாமைத்துவ அலகு தொடர்பான சிக்கல்கள்

| முக்கிய பதவியணி நிலை | PMU இல் சேவைக் காலப்பகுதி | ஏனைய நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளாரா | ஒப்பந்த அடிப்படையில்/ பதிற்கடமை அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டது | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| செயற்திட்டப் பணிப்பாளர் (ஊவா) | 25 மாதம் | ஆம் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) | பதிற்கடமை அடிப்படை | இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பலமுறை விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த ஏனைய விண்ணப்பதாரர்கள் எவரும் காணப்படவில்லை. | செயற்திட்ட பணிப்பாளர் சுற்றறிக்கையின் பிரகாரம் எப்போதும் முழு நேர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |

### 3.9 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கையேடு மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்ட அமுல்ப்படுத்தலை மேற்பார்வை செய்து, கண்காணித்து, ஒருங்கிணைப்பதற்கு குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் 2 ஆவது மற்றும் 4 ஆவது காலாண்டுகளில் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் போது இரண்டு செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | வழிநடாத்தல் குழுக்கள் நிர்ணயிக்கப்பட்ட முறையில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |